Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 216/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேம்பன் | ஜாதி | : | |
| த/பெ | : | துரைராஜ் | தொழில் | : | மளிகை கடை வைத்துள்ளேன். |
| கிராமம் | : | தெற்கு மேட்டுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தெற்கு மேட்டுப்பட்டியில் குடியிருந்துகொண்டு மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 25.01.2023 ஆம் தேதி சுமார் மாலை 05.30 மணியளவில் எனது வீட்டு வாசல் முன்பு ஆஜர் எதிரி அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு ரிப்பேர் செய்து கொண்டிருந்தார். அப்போது நான் அவரிடம் எனது வீட்டின் முன்பு இருசக்கர வாகனத்தை நிறுத்தியுள்ளீர்கள், நான் எப்படி எனது வீட்டிற்கு செல்வது என்று கேட்டேன், அதற்கு ஆஜர் எதிரி என்னை பார்த்து தேவிடியா மகனே நீ செல்வதற்கு வழி கிடையாது என்று சொல்லி, ஆஸ்பெட்டாஸ் சீட்டை எடுத்து எனது தலையில் அடித்துவிட்டார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. தலையில் 5 தையல்கள் போடப்பட்டது. நான் உடனே செம்பட்டி காவல்நிலையம் வந்து நடந்த சம்பவம் சம்மந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்கும் படி புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் காவல்நிலைத்தில் புகார் கொடுத்தவுடன் அங்கிருந்த போலிசார் என்னை ஆத்தூர் அரசு மருத்துவனைக்குக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு எனக்கு சிகிச்சை அளித்து

எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு 5 தையல்கள் போடப்பட்டது. அதன்பின்பு மருத்துவ சிசிக்சை முடித்துவிட்டு நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 216/2023**

**Deposition of PW.2 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லாயி | ஜாதி | : | |
| க/பெ | : | சட்டாம்பிள்ளை | தொழில் | : | தையல் வேலை |
| கிராமம் | : | தெற்கு மேட்டுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 35/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தெற்கு மேட்டுப்பட்டியில் குடியிருந்துகொண்டு தையல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வேம்பனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தேன். அப்போது பக்கத்து வீடுகளில் குடியிருந்த அ.சா.1 வேம்பனும், ஆஜர் எதிரியும் சண்டை போட்டுக்கொண்டார்கள். அப்போது அ.சா.1 வேம்பனை சண்டையிலிருந்து விலக்கிவிட்டு வாங்க வீட்டிற்கு போகலாம் என்று அழைத்துக்கொண்டு போனபோது ஆஜர் எதிரி எங்களுக்கு பின்னால் வந்து ஆஸ்பெட்டாஸ் சீட்டால் வேம்பனை தலையில் அடித்துவிட்டார். அதில் அவருக்கு காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. அவரை மருத்துவமனைக்கு போகச்சொன்னேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 216/2023**

**Deposition of PW.3 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளத்தாய் | ஜாதி | : | |
| ச/பெ | : | அழகர் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | தெற்கு மேட்டுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தெற்கு மேட்டுப்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வேம்பனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். கடந்த 25.01.2023 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, பக்கத்து வீடுகளில் குடியிருந்த அ.சா.1 வேம்பனும், ஆஜர் எதிரியும் சண்டை போட்டுக்கொண்டார்கள். அப்போது அ.சா.1 வேம்பனை ஆஜர் எதிரி அந்த இடத்தில் தான் வண்டியை நிறுத்துவேன் என்று சொல்லி தேவிடியா மகனே உனக்கு இடம் இல்லடா என்று சொல்லி அவரது தலையில் சீட்டைக் கொண்டு வேம்பனை அடித்துவிட்டார். அதில் அவருக்கு காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. அ.சா.1 செம்பட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு, ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 216/2023**

**Deposition of PW.4 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கூந்தாயி | ஜாதி | : | |
| க/பெ | : | துரைராஜ் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | தெற்கு மேட்டுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தெற்கு மேட்டுப்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வேம்பன் எனது மகன் ஆவார். ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 வேம்பன் எனது வீட்டிற்கு முன்பு வண்டியை நிறுத்திவிட்டு வீட்டிற்கு வந்தார். அப்போது ஆஜர் எதிரி எனது மகனை தேவிடியா மகனே எதற்காக வண்டியை நிறுத்தினாய் என்று சொல்லி எனது மகனிடம் சண்டை போட்டார். அப்போது எனது மகன் ஆஜர் எதிரியிடம் எனது வீட்டிற்கு முன்பு எனது வண்டியை நிறுத்தாமல் நான் எங்கு நிறுத்துவேன் என்று சொன்னபோது, ஆஜர் எதிரி எனது மகனை ஆஸ்பெட்டாஸ் சீட்டால் தலையில் அடித்து காயம் ஏற்பட்டது. அவர் ஆத்தூர் அரசு மருத்துவனை சென்று சிகிச்சை பெற்றார். அவருக்கு காயம் ஏற்பட்ட இடத்தில் தையல் போடப்பட்டது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor